முற்பகல் 11–55

6. திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கு சட்டமுன்வடிவில் பேச வாய்ப்பு வழங்கப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், எல்லோரையும் உட்காரச் சொல்லிவிட்டு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரையும் உட்காரச் சொல்லிவிட்டு, நீங்கள் மட்டும் பேசுங்கள். கருத்தைச் சொல்லுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கட்சிக்கு ஒருவர் வீதம் என்று நீங்கள் பேச அழைத்தீர்கள். அண்ணா தி.மு.க. என்பது எங்களுடைய அணியைச் சேர்ந்ததுதான். நான்தான் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறேன். எங்களின் சார்பாக மரியாதைக்குரிய சகோதரர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள் பேசினார். அதற்குப் பின்னரும் மறுபடியும் அனுமதித்துவிட்டீர்களென்றால், என்ன இருக்கிறது? இது எந்தவிதத்தில் இருக்கிறது? சொல்லுங்கள் பார்க்கலாம். (குறுக்கீடுகள்) இது ஒரு குழப்பத்தை உண்டாக்குவது போன்றுதான் இருக்கிறது. (குறுக்கீடுகள்)*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

(திரு. பால் மனோஜ் பாண்டியன், இருக்கையில் நின்றுகொண்டே ஏதோ பேசினார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) அதாவது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறார்கள். மற்றவர்களெல்லாம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கட்சி இருக்கிறது. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *பெரும்பான்மை சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தக் கட்சியில் இருக்கின்றார்களோ, அவர்கள்தான்*

எதிர்க்கட்சி. அந்தக் கட்சி யாரைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கிறதோ—அதுதான் நடைமுறை; அதுதான் மரபு. (குறுக்கீடுகள்) பெரும்பான்மை இல்லாமல் வேறொருவரை நீங்களே நியமித்துக்கொண்டிருந்தால் (குறுக்கீடுகள்) பிறகு மரபு எங்கே இருக்கிறது? (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டேயிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நான் பதில் சொல்கிறேன். உட்காரச் சொல்லுங்கள். நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: பெரும்பான்மை சட்டமன்ற உறுப்பினர்கள்தான். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இவர்களை உட்காரச் சொல்லுங்கள். நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்கிறேன்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: பெரும்பான்மை சட்டமன்ற உறுப்பினர்கள். . . (குறுக்கீடுகள்)

(திரு. பால் மனோஜ் பாண்டியன், நின்றுகொண்டு ஏதோ பேசிக் கொண்டேயிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறார். உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள், உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவதை நான் அவைக் குறிப்பில் பதிவு செய்கிறேன். மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்று நான் சொல்லவில்லை; அண்ணா தி.மு.க. உறுப்பினர் என்றும் நான் சொல்லவில்லை. உறுப்பினர் பேசுங்கள் என்றுதான் நான் சொன்னேன். அவர் பேசியிருக்கிறார். (குறுக்கீடு)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அந்த வார்த்தையை எடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. அவர் பேசியதும் அவைக் குறிப்பில் இருக்கிறது; நீங்கள் பேசியதும் அவைக் குறிப்பில் இருக்கிறது. அடுத்து* online gambling. . . *(குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சிதான். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. நான் அதையும் தாண்டி (குறுக்கீடுகள்) நீங்கள்தான் எதிர்க்கட்சித் தலைவர். (குறுக்கீடுகள்)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *சட்டமன்றத்தில் உறுப்பினர்களுடைய எண்ணிக்கையின் அடிப்படையில் செய்கிறீர்களா? என்ன செய்கிறீர்கள்? (குறுக்கீடுகள்)* ** *(குறுக்கீடுகள்) சுமூகமாக நடந்துகொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், ஒரு* **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எதிர்க்கட்சித் தலைவர் நீங்கள் பேசுவதற்கு வாய்ப்பு தந்திருக்கிறேன். நீங்கள் பேசுங்கள். நான், அதைப் பதிவு செய்கிறேன். (குறுக்கீடு) இந்த அவையை அந்த* issue*-க்கு நாம் கொண்டு செல்ல வேண்டாம். அந்தப் பேச்செல்லாம் வேண்டாம்.* Online rummy . . . *(குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *நீங்கள்தான் ஆரம்பித்திருக்கிறீர்கள். நாங்கள் ஒன்றும் ஆரம்பிக்கவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. நான் சொல்கிறேன். ஓர் உறுப்பினர் பேசுவதற்கு வாய்ப்புக் கேட்டால், நான் அனுமதி கொடுக்கத்தான் செய்வேன். (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அப்படி நீங்கள் கொடுப்பது கிடையாது. ஒரு கட்சிக்கு ஒருவர்தான் என்று சொன்னீர்கள். ஒரு கட்சிக்கு ஒருவர் என்றுதான் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இதுவொரு முக்கியமான சட்டமுன்வடிவு என்பதால் (குறுக்கீடு) அவர் முன்னாள் முதலமைச்சர். . .

திரு. எடப்பாடி K. பழனிசாமி: இதுபோன்று, அவையில் எப்போதும் நடைமுறையில் கொண்டு வந்ததே கிடையாது. இதுவரைக்கும், நடைமுறையில் ஒவ்வொரு கட்சிக்கும் ஒருவர்தான் பேசுவதற்கு நீங்கள் அனுமதியளித்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கட்சிக்கு ஒருவர் பேசுவோம். (குறுக்கீடு)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: நீங்கள் அப்படித்தான் கொடுத்திருக்கிறீர்கள். இதுவரைக்கும் இல்லை, நீங்கள் **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. ஒரு முன்னாள் முதல்வர் (குறுக்கீடு) இல்லை, கேளுங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: ஆமாம், அப்படித்தான் பார்க்க முடிகிறது. இதுவரைக்கும் எப்படி கொண்டுவந்திருக்கிறீர்கள்? அவைக் குறிப்பை எடுத்துப் பாருங்கள். மரபை எடுத்துப் பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நான் சொல்கிறேன். (குறுக்கீடு) அதற்கு வேறொரு நோக்கம் கற்பிக்க வேண்டாம். நான், அவர் ஒரு முன்னாள் முதலமைச்சர் என்கிற முறையில், அவர் பேசுவதற்கு அனுமதி கேட்கும்போது, (குறுக்கீடு) நீங்கள் பேசக் கூடாது என்று நான் சொல்ல முடியாது.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: அப்படி, நிறைய பேர் கேட்கலாம். நீங்கள் இதுவரைக்கும் அனுமதித்தது கிடையாது. இதுவரைக்கும், நமது மரபு அப்படி கிடையாது. முக்கியமான தீர்மானத்தைக் கொண்டுவரும்போது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இன்னும் சொல்லப் போனால் . . . (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: ஒரு முக்கியமான தீர்மானத்தைக் கொண்டு வருகின்றபோது, ஒரு கட்சிக்கு ஒருவர்தான் பேச வேண்டுமென்று தங்களாலே அவையில் அறிவிக்கப்பட்டு, அப்படித்தான் நடைமுறையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. (குறுக்கீடு)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: ஆனால், இந்த அவையின் மரபுக்கு மாறாக, நீங்கள் ஒருவரை பேசச் சொன்னால், எந்தவிதத்தில் நியாயம்? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை கேளுங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: எப்படி நியாயம்? (குறுக்கீடுகள்) எங்களைப் பொறுத்தவரைக்கும் சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்துத்தான் நடக்கிறது. (குறுக்கீடுகள்) சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரைக்கும், கட்சித் தலைவர் இருக்கின்றார்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இருக்கையிலிருந்து எழுந்து நின்றுகொண்டே இருந்தனர்.)

(திரு. கே.பி. முனுசாமி அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் இருக்கையின் அருகில் வந்து ஏதோ பேசினார்.)

(திரு. ஆர். வைத்திலிங்கம், திரு. பால் மனோஜ் பாண்டியன் ஆகியோர் தங்களது இருக்கையைவிட்டு விலகி நின்றுகொண்டே பேசினர்.)

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எல்லோரும் இருக்கையில் சென்று உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள், உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள், உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. முனுசாமி அவர்கள், உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து, எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதாவது, நீங்கள் (குறுக்கீடுகள்) இல்லை, உங்கள் (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் ஒரு

நிமிடம் பேசிய பிறகு, நீங்கள் என்ன முடிவு வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேட்டுவிட்டு, நீங்கள் முடிவு எடுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) எனக்கும் அந்த நோக்கமல்ல; இந்த அவைக்கும் அந்த நோக்கமல்ல; மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் அந்த நோக்கமல்ல. (குறுக்கீடுகள்) ஒரு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கருத்து சொல்வதற்கு வாய்ப்பு கேட்டார்கள் என்ற அடிப்படையில், வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. (குறுக்கீடுகள்) உங்கள் விவகாரங்களை நாங்கள் பேசவில்லை. (குறுக்கீடுகள்) உங்கள் விவகாரங்களை நாங்கள் பேசவில்லை. (குறுக்கீடுகள்) அவர் ஓர் உறுப்பினர் என்கின்ற முறையில்தான் பேச வாய்ப்புக் கொடுத்தேனே தவிர, (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) நான் சொல்வதை நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ஒரு நிமிடம் (குறுக்கீடுகள்) நீங்கள் ஒரு நிமிடம் (குறுக்கீடுகள்) நீங்கள் அவ்வாறு தவறாகச் சொல்லாதீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் தயவுசெய்து (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்கள் தவறான நோக்கம் கற்பிக்க வேண்டாம். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடுகள்) நான் கேட்டால்தானே சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) அதாவது, ஒரு (குறுக்கீடுகள்) இதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, சட்டமுன்வடிவுக்கு (குறுக்கீடுகள்) கருத்துக்கு (குறுக்கீடுகள்) வருகிறேன் (குறுக்கீடுகள்) என்று சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) இதோ பாருங்கள். (குறுக்கீடுகள்) நான் உங்களுக்காகச் சொல்கிறேன். நான் சொல்வதை ஒரு நிமிடம் கேளுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள். ஒரு நிமிடம் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் (குறுக்கீடுகள்) நீங்கள் (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) அதாவது, (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். நான் சொன்னதற்குப் பிறகு, நீங்கள் பேசி முடிவெடுங்கள். (குறுக்கீடுகள்) நான் முதலில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் பேச வேண்டுமல்லவா! நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்களும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு தந்த வாய்ப்பு முடிந்துவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

இந்த அவைக்கு பிரதான எதிர்க்கட்சித் தலைவர் நம்முடைய ஐயா திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள்தான்; அதில் எந்த மாற்றமும் சொல்லவில்லை—அவருக்கு முன்னாள் முதலமைச்சர் என்கிற முறையில்—இந்தச் சட்டமன்றப் பேரவைக்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவராக நீங்கள் அவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். நான் அந்த வார்த்தையையும் பயன்படுத்தவில்லை. (குறுக்கீடுகள்) ஒரு மூத்த உறுப்பினர், முன்னாள் முதலமைச்சர் என்ற அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் என்று சொன்னேனே தவிர, உங்கள் விவகாரத்திற்குள் நான் வரவில்லை. (குறுக்கீடுகள்) அவர்கள் கருத்தைப் பதிவு செய்திருக்கிறார்கள். உங்கள் கருத்தையும் நீங்கள் பதிவு செய்திருக்கிறீர்கள். இது முக்கியமான ஒரு மசோதா. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதுவொரு முக்கியமான மசோதா (குறுக்கீடுகள்) இல்லை, இதுவொரு முக்கியமான மசோதா (குறுக்கீடுகள்) நீங்கள், அனைவரையும் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) தேவையில்லாமல் (குறுக்கீடுகள்) அதாவது (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) என்னை சொல்லாதீர்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்குத்தான் இது இலாபம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன், நீங்கள் உங்கள் இருக்கையில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண்குமார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் அவரவர் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கலாட்டா செய்தால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) திரு. பால் மனோஜ் பாண்டியன், உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. அருண்குமார், உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. பால் மனோஜ் பாண்டியன், உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. அருண்மொழிதேவன், உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர். (திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. ஆர். வைத்திலிங்கம் மற்றும் திரு. பால் மனோஜ் பாண்டியன் தவிர))